ஜநவிநோதிநி.

இல. 9.]   செப்டெம்பர்மீ 1877.   [புஸ்த. VIII.

மார்க்விஸ் அவ் ஸாலிஸ்பரி.

நமது மகாராணியார்க்குப் பிரதிநிதியாய் இந்த இந்துதேசத்திற்குவந்து இப்போது குடிகளைக் கருத்தாய்க் காத்துவருகிற கவர்னர் ஜெனரலாகிய லார்ட் லிட்டன் பிரபுவின் சரித்திரமும் உருவமுஞ் சென்ற சஞ்சிகையில் சேர்த்து அனுப்பியிருக்கிறோமே. எங்கிலாந்திலேயே மந்திராலோசனைச் சங்கத்தில் ஒருவராயிருந்து இந்துதேசப் பிரதான மந்திரியென்று பேர்பெற்றுத் தமக்குத் தகுந்தபடி ஆலோசனைசொல்லவல்ல சில மந்திராதிகாரிகளோடு இத்தேசத்துக் காரியங்களைச் செம்மையாய்ப் பரிபாலித்துவருகிற பிரபுவுக்கு மார்க்விஸ் அவ் ஸாலிஸ்பரி என்று பெயர். அந்தப் பிரபுவின் உருவத்தைப் பக்கத்துப்படத்தில் காணலாம்.

மார்க்விஸ் அவ் ஸாலிஸ்பரி பிரபு 1830-ஞூத்தில் தாய்க்குத் தலைப்பிள்ளையாய்ப் பிறந்தார். இவர் ஈட்டன், கிறிஸ்து சர்ச்சு, ஆக்ஸ்போர்ட் இந்தப் பட்டணங்களின் பாடசாலைகளில் கல்விகற்றுப் பண்டிதரென்று பட்டம்பெற்றபிறகு ஆல்ஸோல்ஸ் வித்தியாசாலைத்தலைவரில் ஒருவராக நியமிக்கப்பட்டார். அதன்பின்பு மிடில்ஸெக்ஸ் மாகாணத்திற்கு டிப்டி லெவ்டனென்டாயிருந்து, 1853-ஞூ முதல் 1868-ஞூவரையில் ஜனப்பிரதிநிதி சங்கத்தில் ஸ்டாம்பர்டு மாகாணத்திற்குப் பிரதிநிதியாயிருந்தார். அப்போது அவர் பிதா பரலோகஞ்சென்றதனால் மார்க்விஸ் என்கிற பட்டமும் கிடைத்தது. அந்தக்காலங்களில் இன்னும் பல விருதுகள் பெற்று மிக்க சுறுசுறுப்பும் சாமர்த்தியமும் உடையவரென்று பிரசித்திபெற்றார்.

க்வார்டர்லி ரிவ்யூமுதலிய பண்டிதர்கள் நடத்தும் அநேக பத்திரிகைகளுக்குச் சகாயமாகப் பல விஷயங்களைப்பற்றி எழுதிவந்தார். இப்படிப் பலவகையிலும் கல்வித்திறம் முதலான விசேஷ நிர்வாக சக்தியுடையவராயிருந்ததனால் 1866-ஷு ஜூலைமாதத்தில் இந்த இந்து தேசத்திற்கு மந்திரியாக நியமிக்கப்பட்டார். ஆயினும் ஒரு சட்டத்தின் விஷயத்தில் தமது அபிப்பிராயத்திற்குக் கொஞ்சம் விரோதமுண்டானதால், 1867-ஷு மார்ச்சுமீ௳த்தில் அந்த உத்தியோகத்தினின்றும் நீங்கிச் சிறிதுகாலம் ஆக்ஸ்போர்ட் சகலகலா சாலையில் விசாரணைத் தலைவராயிருந்து, மறுபடியும் 1874-ஷு பிப்ரவரிமீ௳த்தில், நூதன மந்திராலோசனை சபை ஏற்பட்டபொழுது, இத்தேசத்திற்குப் பிரதான மந்திரியாகி இப்போது ஹிந்துக்களுடைய தேசாசாரமும் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ்செய்யும் வகையும் தெரிந்து பக்ஷபாதமில்லாமல் கருணையோடு நமது ராஜகாரியங்களைச் சீராக நடத்திவருகிறார்.

சம்பாஷணை.

இக்காலத்தில் எவ்விடத்திலும் மிகைபடச்சொல்லுதலும் சம்பாஷணையும் அதிகரித்திருக்கின்றனவாதலால், இவ்விஷயத்தைப்பற்றி யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி சிறிது எழுதுகிறோம்:

உலகத்தில் சொற்கள் எவ்வளவு உபயோகமும் மேன்மையும் உடையனவோ, அதை முதலில் யாவரும் சற்று ஆலோசித்துப்பார்ப்போம். அவை நமது உள்ளத்திற்கு ஒருடைமையாகவும் அவரவரது குணகுணங்களை உள்ளபடி அறிவதற்கு ஒரு அறிகுறியாகவும் இருக்கின்றன. ஏறக்குறைய இவ்வுலகத்தில் இயற்றப்படுகிற எவ்வகை நன்மையுந் தீமையும் சொற்களாலேதான் இயற்றப்படுகின்றன. கடைசியில் அவரவர்களின் குணதோஷங்களைப் பிசகாமல் வெளிப்படுத்திச் சுகதுக்கங்களை விளைவிப்பனவும் சொற்கள்தாம். இப்படி ஒருவர்க்குச் சிறுமையும் பெருமையும் உண்டாக்குவதற்கு முதற்காரணமான சொற்கள் மனிதனுக்குக் கைவசமாயிருக்கின்றன. ஆயினும் ஒருவனுக்கு அறிவும் ஆஸ்தையும் எவ்வளவு உண்டோ அவ்வளவுதான் அவன் சொற்களுக்குப் பெருமையுண்டாம். அறிவு ஆஸ்தை என்கிற இரண்டு திறமையும் ஒருவனிடத்தில் உண்டு இல்லையென்பதை அவன் சொற்களே காட்டிவிடும். ஆதலால் நாம் பேசும் போதெல்லாம் நமது சொற்கள் இனிப்பும் கம்பீரமும் ஒழுங்கும் உடைய

னவாயிருக்கவேண்டும். இக்கருத்துகொண்டே 'ஞயம்பட வுரை' என்றாள் ஔவையும்.

இவ்வகைச் சொற்களால் ஒவ்வொரு காரியத்தைப்பற்றி ஒருவர்க் கொருவர் பேசுவது சம்பாஷணை என்னப்படும். அந்த சம்பாஷணை-ஸாமான்ய ஸம்பாஷணை, தர்க்கம், ஹிதஸம்பாஷணை, பிர்ம்மவிசாரம் என நான்குவிதம். அவற்றுள் பகவத்பக்தியுடையவர்கள் அல்லது ஞானிகள் செய்யும் சம்பாஷணையைப்பற்றியே முக்கியமாய்ப் பேசுகிறோம்.

ஸாமானிய ஸம்பாஷணையாவது அவரவர்களின் மநோவிருத்தி வியவஹாரம் அதாவது வீட்டுச் சங்கதிகளைப்பற்றிப் பேசுவது, லவுகிகவியவஹாரம், கிரந்தவிசாரம், ராஜாங்க வியவஹாரம் முதலியனவாய்ப் பலவிதமாம். இந்த ஸம்பாஷணை, பக்தியுடையவர்களாகட்டும் இல்லாதவர்களாகட்டும், யாவரும் செய்துமுடிக்கத்தக்கதுதான். அப்படி ஸம்பாஷணை செய்கிறகாலங்களில் எவ்வளவு அதிகமாய் யுக்தி புத்தி சாதுரியங்களைச் செலுத்தி ஆசையும் ஆவலுமாய்ப் பேசுகிறோமோ அவ்வளவு பேரும் புகழும் அதிகமாகும்.

ஞானிகள் ஸம்பாஷணை செய்கிறகாலங்களில் அவர் மனதில் பகவத் பக்தி குடிகொண்டிருக்கும். ஸமயஸ்பூர்த்தியும் உற்சாகமும் தெய்வகடாக்ஷமும் அவர்களுக்கு அதிகம். இவையெல்லாம் மனதினுள்ளேயே அலைமோதி அமோகமாய்ப் பிரவகித்துக்கொண்டிருக்குமேயன்றி வெளியே தோன்றா; அவர்களுக்குந் தெரியாமல் ஒவ்வொரு சமயங்களில் வெளியேவந்து தோன்றுவதுமுண்டு. அதைக்கேட்க யாவர்க்கும் பரமானந்தமாயிருக்கும். ஸாமானிய ஸம்பாஷணைசெய்கிற காலங்களில் அவர்கள் ஆமுஷ்மிகஸம்பந்தமாய் எதையும் எடுத்து வெளியே பேசமாட்டார்கள். அந்த ஆனந்தமெல்லாம் உள்ளேயே அடங்கியிருக்கும்; ஆயினும் அடிக்கடியுண்டாகிற சூசனைகளாலும் தாத்பரியங்களாலும் சப்தத்தொனியினாலும் அவர்கள் மகா யோகிகள் என்று ஒருவாறு அறிந்துகொள்ளலாம். ஆனால் ஒன்று உண்டு; பகவத்பக்தனாயிருப்பவன் ஒருவன் ஸம்பாஷணை செய்வனானால் எப்போதாவது ஒரு தருணத்தில் கடவுளுடைய குணாதிசயங்களைச் சிறிதளவாயினும் எடுத்துரையாமல் எழுந்துபோகான்.

இப்படிச் செய்யும் சம்பாஷணைகளில் நமது சொற்கள் இனிப்பும் நயமும் சாதுரியமும் உடையவைகளாய்க் கேட்போர் காதுக்கு வெகு ரஞ்சகமாயிருப்பதைவிடப் பெருமை வேறொன்றுமில்லை. விகடகவிபேச்சுபோல் எல்லாம் சாதுரிய வார்த்தையாயிருப்பதும் ருசியாது. உப்பு எந்தப் பதார்த்தத்திற்கும் அதிக ருசியுண்டாக்குவதாயினும், அளவுக்கு ஒருதுளி அதிகரித்தாலும் விஷமாகுமல்லவா? அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷமாம். ஆதலால் காற்றிலடைந்த வாதனைபோலவும், பதார்த்தங்களிலுறைத்த உப்புரஸம்போலவும் சாதுரியம் சமத்காரம் முத

வியவைகளும் சொற்களில் ஏற்றத்தாழ்ச்சியில்லாமல் மிதமாய் அமைந்திருக்கவேண்டும். இவையெல்லாம் மறைவாயிருந்து சம்பாஷணைக்குச் சிறப்புண்டாக்கவேண்டுமேயன்றி தமது ருசியையும் வெளியே காட்டுவது கூடாது.

தர்க்கமாவது ஒரு விஷயத்தைப்பற்றி முதலில் ஒருவர் பூர்வபக்ஷம் பண்ணவும், அதன்மேலொருவர் ஸமாதானம் சொல்லவும், இவ்வாறு இரண்டுபேர் ஒரு விஷயத்தைக்குறித்துச் செய்யும் விசாரமாம். தர்க்கஞ்செய்யும் காலங்களில் வெகு கவனமாய் வாதிக்கவேண்டும். ஏனெனில் அது தன் நிலையில் நில்லாமல் தர்க்கம் வாக்குவாதமாகவும், வாக்குவாதம் சச்சரவாகவும், சச்சரவு பெருங்கோபமாகவும் முடிந்துபோம். ஆதலால் தர்க்கம் செம்மையாய் முடிந்து பயன்படுவது வெகு அருமை. தர்க்கம் செய்வது யாவர்க்கும் மிக்க உபயோகமானது. கவனமாய்ப் பாதுகாத்து ஒழுங்காக நடத்தினால் தர்க்கம் சீராகவேமுடியும். ஒருதடவை ஒரு கக்ஷி சலித்துத் தோல்வியடைந்தாலும், பிறகு நல்லஆலோசனையுண்டாகி அதனால் வெகு நன்மை விளையும். ஒவ்வொருவேளைகளில், இனி நிலைநிற்காதென்று தள்ளிவிடும்படி எத்தனிக்கத்தக்க கக்ஷிகளைத் தாங்கும்படியான நியாயங்களுந்தோன்றும். ஆதலால் தர்க்கஞ்செய்வதால் விசேஷமாய்ப் பேசுந்திறமையும் புத்திகூர்மையும் உண்டாகும்.

இவ்வகைத் தர்க்கத்திற்கு இன்றியமையாத சில ஒழுங்களுண்டு. அவையாவன:

தொடங்கியவிஷயத்தை விட்டு, விஷயத்தின்மேல் விஷயமாயத் தர்க்கம்பண்ணுவதுபோலவே சாமானியசம்பாஷணையிற் புகுந்து மெல்ல மெல்ல நழுவ அநேகர் முயலுவார்கள். அப்படியில்லாமல், முதலிலேயே தன் வழியைவிட்டு ஒரு விரற்கடைகூட விலகாமலிருக்கும்படி நன்றாய் எல்லையேற்படுத்தி வேலிபோட்டுப் பக்கத்திலெங்குஞ்சாயாமல் நேராய்ப் போகவேண்டும்.

தகுந்த மத்தியஸ்தர்களோடுகூட ஸ்திரபுத்தியும் நியாயசிந்தையும் இல்லாமல் அதற்குள் பிரவேசிக்கக்கூடாது.

நான் எனது என்கிற எண்ணத்தை வேரறுக்கவேண்டும். நாம் தொடங்கியதைவிட்டுப் புதிதாய் ஒரு விஷயத்தையும் வாயெடுக்கக்கூடாது. மனிதர்களைப்பற்றி ஒன்றையும் பேசக்கூடாது. எல்லாம் வஸ்துக்களையும் விஷயங்களையும் தத்துவங்களையுமே பற்றினவையாயிருக்கவேண்டும். கூடியவரையில் நான் நீ என்கிற பேச்சு உண்டாகாமல் தடுக்கவேண்டும்.

தக்கதருணங்களில் முன்னோர் கொள்கைகளை எடுத்து உரைத்து திஷ்டாந்தப்படுத்தலாம். முதலில் துவக்கிய விஷயமெதுவோ அதைச் சாதிக்க வேண்டிய நியாயங்களைத் தேடவேண்டுமேயன்றி, எப்படியாவது ஜயங்கிடைத்தாற் போதுமென்று வீண்வாதஞ்செய்வது கூடாது.

அடிக்கடி நமது கருத்துகள் மாருமல் ஏகரீதியாயிருக்கின்றனவா இல்லேயா என்று, சோதனைசெய்து குணங்களேயும் சீர்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.

∴ உண்மை யாரிடத்திலிருந்தாலும், எந்தவிஷயத்திலிருந்தாலும் அதை அங்கீகரிக்கவேண்டும்.

∴ நம்மால் கூடியவரையில் யாவர்க்கும் சம்மதமான விஷயங்களேயே எடுத்துரைக்க முயலவேண்டும்.

நம்மிடத்திலுள்ள அமைதியடங்கிக் கோபமும் அகங்காரமும் மேலெழுவதாகத் தோன்றிஞல் உடனே வாதத்தை நிறுத்தவேண்டும்.

• கடைசியில் ஏற்றவிதமாய் நியாயத்தை அங்கீகரித்து அடங்கவேண்டுமேயன்றி மனதிற் கள்ளநினைவு கொள்வது கூடாது.

இவ்விதிகளுக்கு மாருமல் ஈசுவரபக்தியும் அசத்தியபயமுமுடைவர்களாய்த் தர்க்கஞ்செய்பவர்களுக்கு ஒருகாலுங் குறைவுநேராது; மேன்மேலும் சாமர்த்தியம் அதிகமாகும்.

ஹிதஸம்பாஷணையாவது ஒருவனுக்கு க்ஷேமம் உண்டாகவேண்டுமென்று கோரிச் செய்கிற சம்பாஷணையாம். ஹிதஸம்பாஷணைசெய்து சித்திபெறுவது மிகவும் அசாத்தியம். ஹிதஸம்பாஷணைசெய்து சித்திபெறவேண்டுமென்று கருதியவர்கள், தமது நற்போதனைகளும் சிக்ஷைகளும் இலகுவாகவே கேட்போர் கருத்திலேறும்படி, வெகு நயமாகவே பேசுவார்கள். அவர்கள் எதையும் தருணம்பார்த்துத் தெரிவிப்பது வழக்கம். கேட்போர்க்குத் தாங்கத்திறமை எவ்வளவோ அவ்வளவுதான் உண்மைகளேயெடுத்து உரைப்பார்கள். இதத்தை உபதேசிக்கக் கருதியவர்கள் எவரிடத்திலும் கண்ணியமும் கவுரமுமாகவே பேசித் தமது கருத்தை நிறைவேற்றிக்கொள்வார்கள். ஹிதஸம்பாஷணை செய்வதற்குத் தக்க முயற்சியில்லாவிடின் அதன் கருத்து ஈடேருது. நாம் சாதாரணமாய் வீடுகளில் பேசுகிற பேச்சு அதிக சாதுரியமாயும் இனிப்பாயுமிருப்பதில்லை. யாராவது புதிதாய் ஒருவரைக் கண்டால் வெகு ரஸமாய்ப்பேசுகிறோம். இதற்குக் காரணம் நமது முயற்சியும் முயற்சியின்மையுமேயொழிய வேறென்ன? இவ்வாறு ஹிதஸம்பாஷணைசெய்து சித்திபெற்றவர்களே விசேஷமாய்க் காண்பது அரிது. அதன்வழி இப்படிப்பட்டதென்று யாவர்க்குந்தெரியும்படி அவற்றுள் இரண்டொரு உதாஹரணம் எடுத்துக்காட்டுகிறோம்:

முற்காலத்தில் பாடலிபுரத்தரசஞன சுதரிசனனுடைய பிள்ளைகள் சிறிதும் படியாமல் மூடர்களாய் ஒழுக்கம் ஆசாரமென்பவை ஒன்றுமில்லாமல் தான்தோன்றியாய் இருந்தார்களென்றும், அதைக் கண்டு அவ்வரசன் மிகவும் துக்கித்துப் புலம்புகையில், சோமசன்மா என்பவன் அப்பிள்ளைகளுக்குப் பற்பலவிதமாய் இனியசொற்களாகவே இதோபதேசஞ்செய்து நன்னெறி பழக்கிஞனென்றும் பஞ்சதந்திரத்திற் படித்திருக்கிறோமே; அப்

டிப்பட்டவைதாம் ஹிதஸம்பாஷணைகள். இப்படி சோமசன்மாசெய்த சம்பாஷணைபோன்ற ஹிதஸம்பாஷணைகளெல்லாம் ஐஹிகமான பயன்களைக் கருதிச்செய்யும் ஸம்பாஷணைகளாம். ஆமுஷ்மிகபலத்தைத்தருவதான ஆத்மஞானத்தைப் பற்றிச்செய்யும் சம்பாஷணைகளுக்கும் பல உதாஹரணமுண்டு.

வெகுகாலத்திற்குமுன்னே ருபு என்று மகரிஷியொருவர் இருந்தார். அவர் நிதாகர் என்பவரிடத்தில் பூர்ணகடாக்ஷம்வைத்து அடிக்கடி அவர்க்கு ஞானோபதேசஞ் செய்துகொண்டிருந்தார். ஒருகால் தன் சிஷ்யனுடைய மனதைப் பரிசோதிக்கவேண்டுமென்று ருபு நிதாகர் வீட்டிற்குப் போனார். அவர் தன் ஆசிரியர் என்று தெரியாமலே அவர்க்குச் சகல உபசாரமும் செய்தானபிறகு நிதாகர் ருபுவை நோக்கி: சுவாமி! இப்போது புசித்த போஜனத்தால் தங்களுக்குப் பசிதணிந்து திருப்தியுண்டாயிற்று? தங்களிருப்பிடமெது? எங்கே எதற்காகப்போகிறீர்கள் என்று கேட்டதற்கு, ருபு: பசியுள்ளவனுக்கன்றோ போஜனத்தால் திருப்தியுண்டாகும்; தாகமுடையவனுக்கன்றோ தண்ணீரால் திருப்தியுண்டாகும்; ஆத்மாவுக்குப் பசிதாகங்களேது? பசிதாகங்களெல்லாம் சரீரகுணங்களல்லவோ? மேலும், எங்கிருந்து வருகிறாய் எங்கேபோகிறாயென்று கேட்கிறீர்களோ? ஆகாயம்போல எங்கும் வியாபித்திருக்கும் ஆத்மாவுக்கு இருப்பிடமேது? போக்கிடமேது என்றிப்படி சிற்சிலவாய் அவர் கேள்விகளைக்கொண்டே அவர்க்கு ஞானத்தை உபதேசித்து அஞ்ஞானத்தை அகற்றினார். சிலகாலங்கழித்து முன் உபதேசித்த தத்துவத்தை நிதாகர் மறுபடியும் மறந்திருப்பதாகத் தெரிந்து ருபு திரும்பவும் அவரண்டை வந்து: நீங்களேன் தனித்து ஒருபுறமாயிருக்கிறீர்களென்று கேட்டார். அதற்கு நிதாகர் இதோ இந்த ராஜன் பரிஜனங்களோடுகூடப் பட்டணத்துட் பிரவேசிப்பதனால் கூட்டங்கலையட்டுமென்று நிற்கிறேனென்று சொன்னதைக் கேட்டு, ருபு: ராஜன் யார்? பரிஜனங்கள் யார் என்று வினவ, அதோ யானைமேலிருப்பவன் ராஜா, மற்றவர்களெல்லாம் பரிஜனங்களென்றார். மறுபடியும் ருபு: யானைமேலிருப்பவன் அரசனென்று பொதுப்படச் சொன்னீர்களே; யானை எதுவோ அரசனெவனோ தெரியவில்லையே என, அதற்கு நிதாகர்: மேலே ஏறியிருப்பவன் அரசன்; கீழே அவனைத் தாங்கியிருப்பது யானையென்று சொன்னதைக்கேட்டு, இன்னுமெனக்கு வெளிப்படவில்லையே; மேலெது? கீழெது? என்றார். அப்போது நிதாகர் தான் அவர்மேலேறிக்கொண்டு என்னைப்போல மேலேறியிருப்பவன் அரசன்; உம்மைப்போலக் கீழே தாங்குவது யானையென்றுசொல்ல, ருபு: அது சரிதான்; நீ என்றாலென்ன? நானென்றாலென்ன? அதை எனக்குத் தெளிவாய்த் தெரிவிக்கவேண்டுமென்றார். உடனே ஞானோதயமாகி நிதாகர் அவர் தாள்களைவணங்கித் தத்துவங்களையறிந்தார். இவ்வகையான சம்பாஷணைகள்தாம் ஹிதஸம்பாஷணைகளாம்.

பிர்ம்மவிசாரமாவது ஆத்மநிஷ்டர்கள் இருவர்சேர்ந்து ஈசுவரதத்வத்தை யறியும்படி ஒருவர்க்கொருவர் செய்யும் வேதாந்தவிசாரமாம். அதனால் உண்டாகும் ஆத்மாநந்தம் இருவர்க்கும் ஸமானமே. ஆத்மவிசாரம் பண்ணத்தக்க புண்ணியபுருஷர்கள் இக்காலத்தில் எங்கேயோ அருமையாயிருக்கிறார்கள். கடவுளையே முதன்மையாய் நம்பி, ஆந்தரபத்தியோடு ஒருவர்க்கொருவர் மனமொத்து ஆத்மவிசாரஞ்செய்வார்களாயின் அதைப் போல் அவ்வளவு பரமாநந்தத்தைத் தருவதும், பரலோகஸாதனமும், பகவன் முகோல்லாஸமுமானது வேறொன்றுமில்லை. நாம் விசாரஞ்செய்கிறகாலங்ளில் உள்ளும் புறமும் ஏகரீதியாய் ஒத்து வாதிக்கவேண்டுமேயன்றி, வயிற்றிலொன்றும் வாயிலொன்றுமாய்ப் பேசுவது கூடாது. வீண் ஆடம்பரங்கள் அதிகமாயில்லாமல் ஸளிதமாகவே பேசவேண்டும். தனக்குத் தத்துவங்கள் எவ்வளவு அதிகமாகத் தெரிந்திருந்தாலும் அடங்கி ஒடுங்கி ஸத்தியத்திற்குப் பயந்து திருத்தமாகவே பேசவேண்டும். நாம் எந்தக்காரியஞ்செய்தாலும் கடவுள் ஒருவரிருக்கிறாரென்று நம்பி அவர் திருவுள்ளத்திற்கு உவப்பாகச்செய்தால், நாம் தொடங்கும் எல்லாக் காரியமும் சித்தியாகி முடிவில் முத்திபெறுவோமென்பதற்குச் சந்தேகமேயில்லை. பிர்ம்மவிசாரத்தைப்பற்றி விசதமாய் எழுதப்புகின் விரியுமாதலால் அதற்கு இங்கு இடமில்லையென்று இவ்வளவோடு ஒழிந்தோம். நாம் வீட்டிலாகட்டும், வெளியிலாகட்டும், ஏகாந்தமாய் ஒருவருடன் என்னபேச்சுபேசினாலும் எந்தக்காரியஞ்செய்தாலும் மூன்றாவனொருவன் கண்காணித்துக்கொண்டிருக்கிறானென்று இருதயத்தில் உறுதியாய்க்கொண்டிருப்பவர்களுக்கு எக்காலத்திலும் எவ்விடத்திலும் எவ்வகைக் குறைவுமில்லை. அப்படிக் கண்காணித்து நம்மை ரக்ஷிக்க வல்லவனே கடவுள்.

அறிவின் பெருமையும் வித்தியாகர்வமும்.

கடவுள் இவ்வுலகத்தைப் படைக்கும்போது அதனுடன் அளவற்ற பொருள்களையும் படைத்திருக்கிறார். அவ்வளவு பொருள்களும் நமது சவுக்கியத்திற்காகப் படைக்கப்பட்டனவேயன்றி வேறல்ல. ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு புதுமையுண்டு. நாம் நமது வாழ்நாளில் எத்தனையோ பொருள்களைக் காண்கிறோம். ஒன்றையும் கருத்தாய் ஊன்றிப்பாராமல் உபேக்ஷயாய்ப் போவதனால் அவைகளின் பெருமை நமக்குப் புலப்படுவதில்லை. ஆதலால் அப்படியிராமல் நாம் எவ்விஷயத்தையும் ஆஸ்தையாய் ஊன்றிப்பார்த்து அவ்வவற்றிலுள்ள புதுமைகளை நம்மால் கூடியவரையில் வருந்திக் கற்றறியவேண்டும். அவ்வாறு அறிவதனாலுண்டாகும் ஆனந்தமும் உற்சாகமும் மற்றெதினாலுமில்லை. முன்பு சிறிதுந்தெரியாமலிருந்த

ஒரு விஷயத்தைப் புதிதாய்க் கண்டறியும்போதுதான் அந்த ஆன ந்தம் அதிகமாகி நமது மனதைப் பூரிக்கும். ஆதலால் நமது ஆத்மானந்தத்திற்கு அறிவு எவ்வளவு அவசியமானதோ அவ்வளவு அறிதற்கு முன்னிருக்கும் அறியாமையும் அவசியமானதே. தனக் குத் தெரியாத விஷயங்களைப் புதிதுபுதிதாய் ஓயாமல் அறிந்துகொ ண்டிருப்பவனே எப்போதும் சவுக்கியமுடையவனாவான். கரு ணைக்கடலான கடவுளாலேயே படைக்கப்பட்டு, அவராலேயே காக்கப்பட்டு, அவராலே அழிக்கப்படுகிற எல்லா மனிதருக்கும் இவ்வாறு இயற்கையின் அருமையை அறியமுயல்வது இன்றியமை யாக்காரியமாயிருக்கின்றது. அப்படி இருப்பதுதான் இவ்வுலகத்தில் எவர்க்கும் சுகவாழ்வென்று சொல்லப்படும். அதாவது, ஒன்றை அறிந்துகொண்டு நமக்கு இவையெல்லாம் தெரிந்தனவென்று அகங் களித்து நிற்பதென்று நினைக்கிறீர்களோ? அதுவன்று; நமக்கு ஒரு விஷயந்தெரியுமென்பது சிறிதுந்தோன்றாமல் நமக்கு அது தெரிய வில்லையே, இது தெரியவில்லையேயென்று எப்போதும் தன் அறியா மையே நினைத்து மனத்தாழ்ச்சியும், அப்படித் தெரியாதவைகளைத் தெரிந்துகொள்ளப் போரவலும், அப்படி அறிந்துகொள்வதில் அதிக குதூஹலமும் உடைத்தாயிருப்பதுதான் நன்றிபயக்கும். ஒரு விஷயம் நமக்கு நன்றாய்த் தெரிந்துபோனால், பிறகு அது நமது கடத்தைகளுக்கு வழிகாட்டவும், பிறர்க்கு நன்மைபயக்கவும், அதை ஆதாரமாகக்கொண்டு நாம் இன்னும் வேறு பொருள்களைக் கண்டுபிடிக்கவும் உபயோகப்படுவதாயினும், பிறகு அதனால் நம க்கு ஆனந்தமுண்டாகுமென்பதில்லை. நமக்கு நன்றாய்த் தெரிந்து போனால் உடனே அது ரஸமற்றதாய்விடுகிறது. புதிதாய்க் கண் டறியும்போது உண்டாகிற அளவற்ற அதிசயமும் ஆனந்தமும் தெரிந்தவுடனே போய்விடுகிறது. இந்த நுட்பத்தைக் கண்டறிந்து அதன் ஏதுக்களை ஆராய்ச்சிசெய்யாவிடினும், எவர்க்கும் இதுமாத்தி ரம் மனதிலுறுத்தாமலிராது. நாம் ஒருதரம் படித்தான புத்தகங்களை மறுபடியும் படிக்க வெறுப்பாயிருப்பதும், மேன்மேலும் புதிய புத் தகங்களைப் பார்க்க ஆவலுண்டாவதுமே இதற்குப் போதுமான திருஷ்டாந்தமாம். சிறுபிராயத்தில் விசேஷ குதூஹலமும் கபட மின்மையும் அறிகிற திறமையும் அதிகமாதலால் அக்காலத்தைவிட வாழ்நாளில் சவுக்கியமானது வேறொன்றுமில்லை. புத்திகூர்மை யுடைய ஒருவன் மற்றவர்களைவிடப் பதினாயிரம் மடங்கு சிறந்தவ னென்று சொல்லலாம். அவன் எப்போதும் எதையும் அதிசய மாகவே பார்த்துக்கொண்டு ஒன்றுமறியாத பாலகன்போலவே இருப் பான். தனக்கு இருக்கும் அறியாமையும், தெரிந்தபின் பரமானந் தத்தைத் தருவதான எண்ணிறந்த பொருள்கள் தனக்குத் தெரியா மலிருப்பதும் அவனுக்குத் தோன்றுமேயன்றி, தான் அறிந்துகொண் டது ஒருபோதுந்தோன்றாது.

வேறு வேலையில்லாமல் இப்படிக் கண்டகண்ட பொருள்களையும் கண்டறிவதில் பயனென்னவென்று பலர் ஆக்ஷேபிக்கலாம். அதற்கு ஆத்மாநந்தமே பெரும்பயனாயிருப்பதுமன்றி வேறு பயன்களும் அநேகமாயுண்டு. சில தற்காலத்தில் பயன்படாவிடினும் பத்து வருஷங்கழித்தாகிலும் பயன்படும். 'முட்டற்றகாலத்திற்கு மூத்தாளும் உதவுவள்' என்பதுபோல், நாம் கற்கிறவிஷயம் எப்படிப் பட்டதாயினும் ஏதாவது ஒருசமயத்திற்கு உதவாமற்போகாது. இதற்குத் திருஷ்டாந்தமாய் ஒருகதை சொல்வதுண்டு. என்னவெனில்:

முற்காலத்தில் பூச்சி புழுமுதலிய சிறு ஜந்துக்களின் இயற்கையையும் குணங்களையும் கண்டறிவதே காரியமாய்த் தன் வாழ்நாளைக் கழித்துக்கொண்டிருந்த ஒருவன், ஒரு ராஜஸம்ஸ்தானத்தில் மந்திரிப்பட்டம்பெற்று வெகு மேன்மையாக வாழ்ந்துகொண்டிருந்தான். அப்படியிருக்கையில் ஒருகால் அவனுக்குப் பிராணாந்தமான அபாயம் ஒன்று சம்பவித்தது. அத்தருணத்தில் அவன் உயிரைப் பாதுகாத்தது அவன் சிறுவயதிற் கண்டறிந்த ஒரு சிறு வண்டின் இயற்கையேயன்றி வேறல்ல. எப்படியெனில்:

அவன் மந்திரியாயிருக்கையில் அரசனுக்கு விரோதமாய் ஏதோ ஒரு காரியஞ்செய்து குற்றவாளியானான். உயிர்வாங்கும்படியான குற்றம் அவன்மேல் சார்த்தப்பட்டது. ஆயினும் விசாரணைசெய்து தீர்ப்பதற்குக் கொஞ்சம் காலவிளம்பமிருந்ததனால், அதுவரையில் அவனை உயர்ந்த ஒரு கோபுரத்தின் நுனிநிலையில் சிறையாய் அடைத்துவைத்தார்கள்.

அப்படியிருக்கையில் அவன் மனையாள், தன் புருஷனுக்கு நேர்ந்த விபத்தைக்கேட்டு மிகவும் விசனமடைந்து, ஒருநாள் ராத்திரி தன் கணவனைச் சிறைசெய்திருந்த கோபுரத்தின் கீழ்ப்புறத்தில் வந்து உட்கார்ந்து புலம்பத்தொடங்கினாள். அந்த அழுகைக்குரலைக்கேட்டு அந்த மந்திரி, கோபுரநிலைவாயிலின் வழியாய்க் குனிந்து பார்த்துத் தன் மனையாளென்று தெரிந்து, ஒரு கடிதமெழுதி அவளிருக்குமிடத்திலெறிந்தான். அந்தக் கடிதத்தில் "ஓ பெண்ணே! நீ விசனப்படவேண்டாம்; அடியிற்குறித்த பொருள்களைமாத்திரம் தாமதமில்லாமல் சித்தப்படுத்திக்கொண்டுவா; உயிரோடுகூடிய கருவண்டு ஒன்று, வாசனைகெட்டுப் பழகிய வெண்ணெய் ஒருதுளி, மெல்லிய நூலுருண்டையொன்று, உரத்த நூலுருண்டையொன்று, நல்ல கயிற்றுச்சுருளொன்று, மிகவும் பருத்த தாம்புவடமொன்று; இவைகளைத் தவறாமல் உடனே கொண்டுவந்துசேர்" என்று எழுதியிருந்தது.

அவள் அந்தச் சீட்டைப்பார்த்துச் சந்தோஷமாய் உடனே வீட்டுக்குப்போய் அதிலெழுதியபடியே எல்லாப் பொருள்களையும்

சேகரஞ்செய்துகொண்டு மறுநாள் ராத்திரி அவ்விடம்வந்து சேர்ந்தாள். அதுகண்டு அந்த மந்திரி, வண்டின் தலையில் துளி வெண்ணெயைத்தடவி மெல்லிய நூலின் ஒரு நுனியை அதன்மேல் கட்டித் தானிருக்குமிடத்திற்கு நேர்முகமாய்த் திருப்பி வண்டைக் கோபுரச்சுவரில் விடும்படி கட்டளையிட்டான். அவளும் அவ்வாறே நடத்தினாள்.

பிறகு நடந்த வரலாறு என்னவெனில், எந்தப்பக்கமாய் வாசனைவருகிறதோ அந்தப்பக்கமாயே அந்தஜாதி வண்டுகள் ஊர்ந்து போவது வழக்கம். அதனால் தன் தலைமேலிருந்த வெண்ணெயின் வாசனையைப்பற்றிக்கொண்டு அதேமுகமாய் நகர்ந்துபோய் அந்த வண்டு மந்திரி அடைபட்டிருக்கும் பலகணிவாயிலண்டை சேர்ந்தது. சேர்ந்தவுடனே அவன் அதைப் பிடித்துக்கொண்டு அதன்மேல் சுற்றியிருந்த நூலின் ஒரு பக்கத்தினுனியைக் கைப்பற்றினான்.

அதைக் கைப்பற்றிக்கொண்டபின்பு அந்த மந்திரி, அந்த நூலின் மற்றொரு நுனியில் உரத்தநூலை முடியும்படி மனையாளுக்குக் குறிகாட்ட அவள் அதையும் அப்படியே செய்தாள். அவன் தன் கையிலிருந்த மெல்லியநூலைப் பிடித்திழுத்து உரத்த நூலைக் கைக்கொண்டான். இவ்வாறே அந்த நூலின் ஸகாயத்தைக்கொண்டு பருத்த கயிற்றைக் கைப்பற்றி அதனுதவியால் பருத்த தாம்பையும் இழுத்துக்கொண்டு அதை அந்தப் பலகணிவாயிலிலுள்ள இருப்புக் கம்பியில் உறுதியாய்க் கட்டிவிட்டு அந்தக் கயிற்றைத் தனக்கு ஆதாயமாய்ப் பற்றிக்கொண்டு சிறைச்சாலையினின்றும் சுவர்வழியாய்க் கீழேயிறங்கிக் குதித்தோடிப்போனான். இவ்வாறு அவன் அற்பமான ஒரு சிறுவண்டின் வழக்கத்தைக் கண்டறிந்திருந்ததனால், பிராணாந்தமான அபாயம் நேரவொட்டாமல் தப்பித்துக்கொண்டு ஓடிப்போம்படி நேரிட்டது. ஆதலால் கற்றதும் பெற்றதும் வீண்போகாதென்று பெரியோர் சொல்வது ஒருபோதும் பொய்யாகாது.

அகங்காரத்தை ஒழித்துச் சாந்தகுணத்தையே முக்கியமாயுடையவர்களை உலகத்திற்காண்பது அரிது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தில் அகங்காரமுற்றிருக்கிறார்கள். ஆழ்ந்துபார்க்குமளவில் ஒருவரும் அகங்காரப்படுவதற்கு ஏது ஒன்றுமில்லை. ஒருவன் விசேஷமாய்க் கல்விகற்றிருப்பானானால் அவன் ஒருவாறு மனவெழுச்சிகொள்ள ஏது உண்டு. அந்தக் கல்வியும், தன் சொந்தமுயற்சியாலேயே வருந்திப் பரிசோதித்துக்கற்றறிந்திருந்தாலல்லது, கர்வங்கொள்வதற்குக் காரணமாகாது. வேறொருவன் வருந்திக் கற்றறிந்த கல்வியில் ஒரு சிறிது நாம் பெற்றுக்கொள்வதனால் அகங்காரமடைவதற்கு ஏதுவுண்டோ? ஒருவனிடத்தில் ஒரு காசு பெற்றுக்கொள்வதற்கும் எவ்வளவு அறிவு பெற்றுக்கொள்

வதற்கும் வேற்றுமை என்ன? தங்களுக்குப் பிச்சை எவ்வளவு அதிகமாகத்தான் கிடைக்கட்டும், பிச்சைக்காரர்கள் கர்வங்கொள்ளலாமா? கல்வியும் அப்படிப்பட்டதே. ஒருவன் தானே முதலில் வருந்திப் பொன்சம்பாதித்துப் பிறகு அந்தச் செம்மையாய்ச் சுத்திசெய்து தானே நாணயமாக்கிக் கைக்கொண்டாலும், அல்லது இவ்வாறு ஒருவன் ஏற்படுத்தியபொருளைத் தன் புத்திசாமர்த்தியங்களை விசேஷமாய்ச்செலுத்தி நல்லவழியில் பிரயாசைப்பட்டுச் சம்பாதித்தாலும் சிறிது கர்வங்கொள்ளக் காரணமுண்டு. இவைகளுள் ஒன்றுஞ் செய்யாமலிருக்க, வழிப்போக்கனொருவன் தன் கையிலிருந்தபொருளை நமக்குப் பிச்சை கொடுத்துப்போவானானால் அதைப்பற்றி நாம் கர்வங்கொள்ளலாமா? ஒருவன் இவ்வகையாய்ப் பிச்சையெடுத்துக் கோடி ரூபாய் குவித்தாலும், அவன் அற்பமாயினுந் தன் உழைப்பினாலேயே சம்பாதித்துக்கொள்பவனுக்குச் சிறிதும் சமமாகான். இந்தத் திருஷ்டாந்தப்படியே, ஒரு மனிதன் சூரியன் பூமியைவிடப் பெரிதென்று போதித்தால் அதை அறிந்துகொண்டதற்காக நாம் என்னகாரணத்தைக்கொண்டு கர்வப்படுகிறது? அப்படியே பல பண்டிதர்கள் தாம் கற்றறிந்த பற்பல விஷயங்களையும் நமக்குக் கற்பித்துக்கொடுப்பார்களானால், நமக்கு இவ்வளவு தெரிந்தனவேயென்று அவைகளைப்பற்றித்தான் நாம் கர்வம்கொள்வதற்குக் காரணமென்ன? இக்காலத்தில் நமக்குத் தெரியுமென்று நாம் அகங்காரப்படுவதற்குக் காரணமான கல்விகளெல்லாம் இத்தன்மையான கேடுகெட்டவழியால் வந்தவைகள்தாம். முன் யாரோ ஒரு வித்வான் வருந்திப் பயிற்சிசெய்து ஸ்தாபித்திருக்கிற விஷயங்களை வேறொருவர் நமக்குச் சம்மதமில்லாமலிருக்கப் பலவந்தமாகவும், நாம் நல்லது பொல்லாதென்பதைக் கூடத் தெரிந்துகொள்ளச் சக்தியற்றிருந்த நமது வாலிபவயதில் அடித்துப்புடைத்து நமக்கு அருவருப்பாகவும் போதித்திருக்க, அந்த விஷயங்களைக்கொண்டு நாம் கர்வப்படுவதற்கென்ன காரணம்? ஆ ஆ! நாம் எவ்வளவு வருந்திப் பொருள்தேடி அதற்காக கர்வப்படுகிறோம்! உண்மையாய்ப்பார்க்குமளவில் நாமே பாடுபட்டுத்தேடிக் கற்றறிந்தவைதவிர வேறொன்றும் நாம் மனவெழுச்சிகொள்வதற்கு ஏதுவாகாது. ஒரு மனிதன் ஒரு பாலைவனத்தில் ஒரு ஸ்தானமேற்படுத்தி அங்கே சிறிதாய் ஒரு குடிசை போட்டுக் குடியிருப்பதற்கு வேண்டிய பல சாமான்களையும் வருந்திச் சேகரித்துக்கொள்வானானால் அவன் தனக்கு ஒரு சிறுவீடு கட்டிக்கொண்டதற்காகத் தன்னைப் போற்றிக்கொள்வதற்கிடமுண்டு. வெகு நேர்த்தியாக நிர்மித்துச் சகலவித சாமான்களும் ஒன்றுலொன்று குறைவில்லாமல் சேகரிக்கப்பெற்ற திவ்விய மாளிகையொன்று ஒருவனுக்குக் கிடைக்குமாயின், அவன் முன்னவனைவிடப் பத்துகோடி பங்காய்ச் சுகங்கள் அனுபவிக்க ஏதுவுண்டாயி

னும், எள்ளளவேனும் அகங்காரங்கொள்வதற்கு ஏதுவென்ன இருக்கின்றது! அம்மாளிகையை ஸ்தாபித்தவன் திறமைக்காகவோ இவன் கர்வங்கொள்ளுகிறது! பிறர்தேடிய தந்தக்கட்டிலிற் படுப்பவனுக்கு உண்டாகும் ஆனந்தம், தான் தேடிய மூங்கிற்பாயிற் படுப்பவனுக்கு உண்டாகும் ஆனந்தத்தில் பதினாயிரத்திலொருபங்குக்குக்கூட ஈடன்று. குறைக்குடங் கூத்தாடுவதுபோல் நன்றாய்க் கற்றறிய வல்லமையில்லாமல் அரைவாய் கால்வாயாயிருப்பவர்கள்தாம் இவ்வாறு வீண் அகங்காரங்கொண்டு திரிவார்கள். ஆழ்ந்த வெள்ளமோசைகொள்ளாமல் கம்பீரமாயோடுவதுபோல் நன்றாய் ஆழ்ந்தறிந்த பெரியோர்கள் எப்போதும் அடங்கியே இருப்பார்கள்.

தக்காணத்துப் பூர்வகதை.

நரியும், அம்பட்டனும், ஏழுபெண்ணுள்ள ஒரு பிராமணனும்

(தொடர்ச்சி.)

மிகுந்த சாமர்த்தியமும் சாதுரியமுமுள்ள ஒரு ராஜகுமாரன், சிறிதுகாலம் விநோதமாய் விளையாடித்திரியவேண்டுமென்று ஆவல்கொண்டு, குள்ளநரி வேஷந் தரித்துப் பலவிதவேடிக்கைகள் செய்துகொண்டு சீமையெங்குஞ் சுற்றிவருகையில், ஓரிடத்தில் குடிக்கக்கூழும் கட்டக் கந்தையுமில்லாமல் பேதைப்பிராமணனொருவன் ஏழுபெண்களை வைத்துக்கொண்டு அல்லாடித் தவித்துக்கொண்டிருந்தான். நரியாயிருந்த ராஜகுமாரன் அதைக்கண்டு இரக்கமுற்று அவன் மூத்த மகளை விவாகஞ்செய்துகொண்டு சகலசம்பத்தும் நிறைந்து தேவேந்திர சபைபோல் விளங்காநின்ற தன்குகைக்குள், தான் ராஜகுமாரனென்று தன் பெண்சாதிக்குந் தெரியாமலே, சுகமாக வாஸம்பண்ணிக்கொண்டிருந்தான். அவன் மாமனான ஏழைப்பிராமணன் அப்போது வறுமையால்வருந்தி அவனிடத்தில் ஏதாவது கொஞ்சம் உதவிகேட்கலாமென்றுவந்தான். நரிராஜனும் ஐயோ எளியவன்! என்று அவனிடத்தில் மனதிரங்கி, உடனே முளைத்து நவரத்தினங்கள் நிறைந்த பழங்கள் பழுக்கத்தக்க ஒரு அற்புதமான மாதளஞ்செடியைக் கொடுத்தனுப்பினான். பிராமணன் அதன் பெருமையை அறியாமல் பழுத்த பழங்களையெல்லாம் சாதாரணமான பழங்கள்போலவே பாவித்து அற்பவிலைக்கு ஒரு வஞ்சகக்கோமுட்டிக்கு விற்றுவிட்டுக் கடைசியில் ஒரு பழத்தையரிந்துபார்க்க அதில் விலையுயர்ந்த ரத்தினங்களிருக்கவே அதைக்கொண்டு ஒரு தட்டான் கடையில் விற்கப்போய் திருடனென்று அவன் கையிற்பிடிபட்டுப் புடைபட்டு மணிகளையும் பறிகொடுத்து வீடுபோய்ச் சேர்ந்தான்.

இந்தத் துர்ப்பாக்கிய விருத்தாந்தத்தைக்கேட்டு அவன் பெண்டுபிள்ளைகள் மிகவும் விசனமடைந்து, மறுபடியும் மருமகனை ஒருதடவை போய்ப்பார்த்துவரும்படி சொன்னார்கள். பிராமணனும் அக்கருத்துக்கிசைந்து அந்த நரியின் குகைக்குச் சென்றான். அவன் வெகுதூரத்தில் வருகையிலேயே நரி கண்டு அவன் மனதில் சந்துஷ்டியில்லாமல் கலக்கமுற்றிருந்ததை 'அகத்தினழகு முகத்

தில் தெரியும்' என்கிறபடி, அவன் முகக்களையினாலேயே தெரிந்து கொண்டு, அவனண்டைவந்து: ஓ! மாமனே! நீங்கள் இவ்வளவு சுறுக்காய்த் திரும்பிவருவீர்களென்று நான் கனவிலும் கருதவில்லையே! என்ன விசேஷமென்று கேட்க, அவன்: நீ செய்த உதவியைக்கொண்டு நாங்கள் எவ்வளவோகாலம் சுகமாக வாழ்ந்துகொண்டிருக்கலாம்! பால்பாக்கியமில்லாதான் விலைப்பாலையும் பூனைகுடித்ததேயென்று என் துர்ப்பாக்கியத்தை உன்னுடன் சொல்லிப்போகலாமென்று வந்தேனேயொழிய வேறில்லையென்றான். அதைக் கேட்டு நரி: அதென்ன? நான் கொடுத்த மாதளஞ்செடியை நீங்கள் என்னசெய்தீர்களென, அவன்: அந்தத் துக்கத்தை நீ ஏன் கேட்கிறாய் என்று, தான் அந்தச் செடியைக்கொண்டுபோய் நட்டதும், மறுநாளே அந்தச் செடி பெரிதாகிப் பழுக்கத்தொடங்கியதும், அன்றுமுதல் ஒரேகோமுட்டி அந்தப் பழங்கள் எல்லாவற்றையும் திருட்டுத்தனமாய் வாங்கிக்கொண்டுபோனதும், தானும் அவற்றின் அருமையை அறியாமல் அற்பவிலைக்கு விற்றுவிட்டதும், பிறகு அந்தச் செடி பட்டுப்போகிற காலம்வந்து ஒருநாள் பழங்கள் பழுக்காமற்போகவே அன்றையதினம் சோற்றுக்குக் கதியில்லாமல் யாவரும் பசியால் வருந்துகையில் தன் சிறியமகள் பசிதாளமாட்டாமல் அந்தச் செடியை நாலாமூலையும் ஆராய்ந்துபார்த்து இரண்டொருபழந் தேடிக்கொண்டுவந்து அரிய, அந்தப் பழங்களில் விலையில்லா மாணிக்கங்கள் விசேஷமாய் நிறைந்திருக்கவே அதைக் கண்டு தன்னைக் கோமுட்டி மோசஞ்செய்ததாக நினைத்துத் தான் உடனே அவன் வீட்டிற்குப்போய்த் தன் பழங்களைக் கொடுக்கும்படி கேட்க, அவன் ஏது பழமென்று சொல்லித் தன்னை வெருட்டினதும், தன்னிடத்திலிருந்த மணியையாவது விற்றுக்கொண்டு வருவோமென்று தட்டான்கடைக்குப்போக அவன் கையிற் புடைபட்டு வந்ததுமாகிய எல்லாச் செய்திகளையும் ஒன்றுவிடாமற்சொன்னான். அதைக்கேட்டு நரி:

> 'வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
> பொருந்துவன போமினென்றாற் போகா'

அதிர்ஷ்டமில்லாதவர்களுக்குச் செல்வம் வேண்டுமென்றால் எங்கிருந்துவரும்? என்றுசொல்லி நகைத்து, எப்படியாவது க்ஷேமமாயிருக்கட்டுமென்று கருதி நாம் நன்மைசெய்யப்போகத் தீமையாய் விளைகின்றதே! எவரெவர்களுக்கு எவ்வெவ்வளவு தகுமோ அவ்வளவுதான் செய்யலாம்; உங்களைப்போன்ற துரதிர்ஷ்டப் பிராணிகளுக்குச் சிறந்த பொருள் ஒன்றுந்தகாது என்று ஒரு சிறிய சட்டியை அவன் கையில் கொடுத்து: உங்களுக்கு ஏற்றது இதுதான்; உங்கள் வீட்டில் யாருக்கு எப்போது பசியெடுத்தாலும் இதில் வெகு நேர்த்தியான உணவுகள் அகப்பட்டுக்கொண்டிருக்கும். இதை வைத்துக்கொண்டு சுகக்கியமாய்ப் பிழையுங்கள் என்று

சொல்லிற்று. பிராமணன் அதை வாங்கிக்கொண்டு அதிலுள்ள உணவு குமுகுமுவென்று மணக்கவே மிகவுஞ் சந்தோஷமாய் மருமகனைத் தழுவி முத்தமிட்டு: இப்போது என் குடும்பமெல்லாம் உன்னாலல்லவோ நிலைநிற்கிறது என்று சொல்லிச் செலவு பெற்றுக்கொண்டு வீட்டுக்குப்போனான்.

அந்தச் சட்டி உணவைவைத்துக்கொண்டு அவர்கள் சிலகாலம் சுகமாகவே வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அந்தச் சட்டியும் நாள் தப்பாமல் அவர்களுக்கு வேண்டுமளவு நாளுக்குநாள் வெகு நேர்த்தியான உணவுகளைத் தந்துகொண்டிருந்தது. அக்காலத்தில் அவர்கள் அண்டைவீட்டில் ஒரு செல்வவானுண்டு; அவன் ராஜசமுகத்தில் மிகவும் செல்வாக்குள்ளவன். அவன் நாள்தோறும் பிராமணன் வீட்டில் உணவுகள் வெகு ருசியாய் மணப்பதை மோந்து; இதென்ன! இந்த ஏழைப்பார்ப்பான் வீட்டுப்போஜனம் இப்படி வாசனைவீசுகின்றதே! நாம் எவ்வளவு செலவுசெய்து சமைத்தாலும் இப்படியாகிறதில்லையே என்று வியந்து, ஒருநாள் அந்தப் பிராமணனை அழைத்து: நீ வெகு தரித்திரனாயினும் நாள்தப்பாமல் உன் வீட்டுச் சாப்பாடுமாத்திரம் வெகு நேர்த்தியாய் மணக்கின்றதே; அதன் வரலாறு என்னவென்று கேட்டான்.

அந்த ஏழைப்பார்ப்பான் தனக்கு யார்க்குமில்லாத பெருஞ் செல்வமிருக்கிறதென்ற கெர்வத்தால், மறுநாள் அண்டைவீட்டுச் செல்வவானைத் தன் வீட்டுக்கு விருந்துண்ண வரவழைத்தான். அவனும் சந்தோஷமாய்ப் போய்ப் போஜனத்துக்கு உட்காருகையில், கள்ளங்கபடமறியாத அந்தப் பிராமணன், மாடத்தில் கவிழ்த்திருந்த சட்டியை நிமிர்த்தி அதிலிருந்து அந்த விருந்தாளி ஒருநாளும் உண்ணாத உணவுகளை எடுத்துப் பரிமாறி அதின் வரலாற்றையும் அவர்க்கு அறிவித்தான்.

அதைக் கேட்டதும் கேளாததுமாய் அயல்வாழ்ந்தால் ஐந்து பட்டினிகிடப்பவனும் அயலாருடைமைக்குப் பேயாய்ப்பறப்பவனுமான அந்தச் செல்வவான் அரசனண்டைக்கு ஓடி, இந்தப் பட்டணத்தில் ஒரு ஏழைப்பார்ப்பான் இருக்கிறான்; அவனிடத்தில் அற்புதமான சட்டியொன்றிருக்கக் கண்டேன்; அதில் அதிகருசியான சாப்பாடுகள் எடுக்க எடுக்க மேன்மேலும் சுரந்துகொண்டிருக்கின்றன. ஒருநாள் நானும் அதைப் புசித்துப் பார்த்தேன்; அதன் பெருமை இவ்வளவென்று என்னால் சொல்லிமுடியாது. அதை நான் பிடுங்கிக்கொண்டுவந்தால் குற்றமாகும்; தங்களுக்கு அதன்மேல் விருப்பமிருந்தால் வரவழைத்துக்கொள்ளலாமென்றான். அரசன் அதைக் கேட்டு, இதென்ன! நீ சொல்வது வெகு புதுமையாயிருக்கின்றதே! சட்டியில் சோறு சுரப்பதுண்டோ? அதை நான் நேராய்ப் பார்த்தாலல்லது எனக்கு உண்மைப்படாது என்று சொல்லி, அந்தச் சட்டியைப் பார்ப்பதற்

காகப் பார்ப்பான் வீட்டிற்குவந்தான். அரசனைக்காணவே அந்தப் பேதைப் பிராமணன் வெகு சந்தோஷமாய்த் தன் சட்டியின் அற்புதங்களையெல்லாம் அவர்க்குக் காட்டினான். அதைக் கண்டு அரசன் பிரமித்து உடனே அந்தச் சட்டியைப் பிராமணனிடத்தினின்றும் பிடுங்கிக்கொண்டுவந்து அரமனை சேர்க்கும்படி சேவகர்களுக்குக் கட்டளையிட்டுப் போயினான். அவர்களும் அப்படியே அந்தச் சட்டியை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இவ்வாறு இரண்டாந் தரமும் அந்தணன் தன் மருகன்கொடையை இழந்துபோயினான்.

தன் பொருளை அரசன் கொள்ளையாடிக்கொண்டுபோகவே, அந்த எளியமனிதன் ஒன்றும் தோன்றாமல் தன் மனையாளைப் பார்த்து: இனி நமக்கு என்னகதி; மருமகனண்டைதானே திரும்பவும் போயிரக்கவேண்டும் என்று சொல்லித் துக்கிக்க, அவள்: நமது அஜாக்கிரதையாலேதானே நமக்குத் துன்பம்வந்து விளைந்தது. வீட்டுச்செய்தி வெளிப்போகவொட்டாமல் ரகசியமாய் வைத்துக் கொண்டிருந்தால் இப்படியெல்லாம் ஏன் நேரிடுகிறது! அடிக்கடி போய் நாம் தொந்தரைசெய்தால் மருமகன்தான் சும்மாவிருப்பாரா? கடைசியில் அவர்க்கும் கோபமுண்டானால் என்னசெய்கிறது என்றாள்.

மருமகனைவிட வேறுவழியில்லாமையால் பிராமணன் மறுபடியும் நரியிடத்திற்குப்போய்த் தன் துக்ககதைகளைச்சொல்ல, அது கேட்டு நரி மிகவும் வெறுப்படைந்து: ஓ பெரியவரே! நானும் எத்தனையோ இடங்களிற் பார்த்திருக்கிறேன்; உம்மைப்போலப் புத்தியீனரை எங்குங்கண்டதில்லை. உமது வீட்டுக்கதையை அயலாருடன் நீர் ஏன் சொல்லுகிறீர்? 'வீட்டுக்கருமம் நாட்டுக்கு உரையேல்' எனப் பழமொழிகேட்டதில்லையா! இப்போது அதை நினைத்துப் பயனென்ன! போனதைச் சொல்லுகிறவன் பித்தனல்லவா! இதோ மற்றொரு சட்டியிருக்கிறது. இது நீர் இழந்துபோன பொருள்களையெல்லாம் வாங்கிக்கொடுக்கும். இதனுள் ஒரு கயிறுந்தடியும் இருக்கின்றன; உங்கள் பொருளைப் பறித்துக்கொண்டவர்களண்டைபோய் இதைத் திறந்து அவர்களை அடிக்கும்படி கட்டளையிடுங்கள்; உங்கள் பொருள் உடனே உங்களண்டைவந்து சேரும்; நீங்கள்மாத்திரம் தனியேயிருக்கும்போது இதைத் திறக்கப்போகிறீர்கள்! உங்களையே மடக்கிக்கொண்டு உதைக்கும்; இதை வெகு ஜாக்கிரதையாய் வைத்துக்கொண்டிருந்தால் வெகுநாளைக்குப் பிழைக்கலாம்; இனிமேல் என்னிடத்திற்கு வருவதிற் பயனில்லையென்றுசொல்லி அனுப்பிற்று.

அந்தப் பிராமணன் வெகு சந்தோஷமாய் மருமகனை ஆசீர்வதித்துச் செலவுபெற்றுக்கொண்டு போகையில் நடுவழியே, அந்த நரி சொன்னது மெய்யோ பொய்யோவென்று சந்தேகமுண்டாகி, அந்தச் சட்டியைக் கொஞ்சந்திறந்தான். உடனே அதினின்றும் ஒரு

தாம்புந்தடியும் வெளியே குதித்து, தாம்பு அவனை ஒரு மரத் தோடு சேர்த்துக்கட்ட, தடி உயிர்போம்படி அடிக்கத்தொடங்கிற்று. அதைத் தடுக்கச் சக்தியில்லாமல் அவன் மிகவும் துன்பப்பட்டு: ஐயோ! போதும் போதும்! வேண்டாம், இதுவும் ஒரு தலைவிதியா வென்று பலதரம் முறையிட்டான். என்னசொல்லியும் அது ஓயா மல் அவன் அயர்ந்து கீழே விழுமளவும் அடித்துவிட்டு நின்றது.

உடனே அவன் அவைகளை எடுத்துச் சட்டியில் அடைத்து மூடிவிட்டு, தான் அடிபட்ட விசனம் ஒருபக்கத்திலிருக்க, தனக்கு அத்தன்மையான சட்டிகிடைத்ததற்காக வெகு சந்தோஷ மடைந்து: முன்னிலும் நேர்த்தியான சட்டியொன்று இப்போது வந் திருக்கிறது; விருப்பமிருந்தால் வந்துபார்க்கலாமென்று அரசனுக் கும் செல்வவானுக்கும் உடனே செய்திசொல்லி யனுப்பினான். அதைக் கேட்டவுடனே அவர்கள்: இது முன்னதைவிட மேன்மை பெற்றதாயிருக்கும்; முன்போலவே கொள்ளையடித்துக்கொண்டு வரலாமென்று பேரானந்தமாய் அநேகம் பரிஜனங்களோடுகூட அந் தப் பிராமணன் இருக்குமிடத்திற்கு வந்தார்கள். அவர்கள் வந்த தும் அவன் சட்டியைத்திறந்துவிட்டு: இவர்கள் ஒவ்வொருவரை யுங் கட்டிபுடையுங்கள் என்று கட்டளையிட்டான். உடனே கயிறு குதித்து யாவரையும் மரத்திற் கட்டிவிட்டது. தடி எழும்பி ராஜா, தனிகன், மற்றுமுள்ள பரிஜனங்கள் யாவரையும் அடிக்க ஆரம் பித்தது. அவர்கள் அந்தப் புடையலைப் பொறுக்கமாட்டாமல் வெருள வெருள விழித்துக் கூச்சலிடக்கண்டு, பிராமணன்: இப் போதாவது ஊரார் உடைமைக்குப் பேயாய்ப்பறப்பது கூடாதென்று புத்திவந்ததா? இனியாவது என் சோற்றுச்சட்டியைத் கொடுக்க மனம் வருகிறதா? இனி இவ்வகைக் கெட்டநடையை விட்டுவிடு வீர்களாவென்று கேட்டான்.

அவர்களெல்லாரும் மிகவும் பயந்து இன்னம் சிறிதுநேரம் இப் படியேயிருந்தால் உயிரை இழந்துபோவோமென்று திகிலடைந் தார்கள். அரசன்: இனி புத்திவந்தது; உன் சொத்தை இதோ கொடுத்துவிடுகிறேன்; இந்தத் தடியடியை நிறுத்து இந்தத் தடியடியை நிறுத்து என்று கதறிப் பலவாறு வேண்டவே, பிரா மணன் இரக்கமுற்றுத் தடியையுந்தாம்பையுமிழுத்துச் சட்டியி லடைத்தான். உடனே சோற்றுச்சட்டியும் வந்து சேர்ந்தது. யாவ ரும் பிராமணனிடத்தில் பயமுற்றவர்களாய் அவனுக்கு விசேஷ மரியாதைசெய்துவிட்டு அவரவரிருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள். எந்நாளும் தனக்குக் குறையுண்டாகாதபடி வெகுநேர்த்தியாய் பலவகைப் போஜனமும் அளிக்கத்தக்கதோர் அற்புதச்சட்டியும், தனக்குப் பகையாளியென்பவன் இவ்வுலகிலேயே உண்டாகாம லிருக்கும்படி செய்யவல்ல ஒரு தடிதாம்புச்சட்டியும் கிடைக்

கவே பிராமணன் பேரானந்தமடைந்து வீடுபோய்ச்சேர்ந்து, தனக்குத் தன் மருமகன் கொடுத்த கொடையின் அதிசயத்தைச் சொல்லி வீட்டிலுள்ளோர் அனைவரையும் ஆனந்தக்கடலில் ஆழ்த்தினான்.

பின்பு மற்றொருநாள் அவன், தான் முன் விலைதெரியாமல் விற்றுப் போட்ட பழங்களையும் வீடுகொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்று கருத்துகொண்டு, தன்னை மோசஞ்செய்து தன் பழங்களை வாங்கிப் போன, வஞ்சகக்கோமுட்டி வீட்டில் தன் தடிச்சட்டியைக் கொண்டு வைத்து திறந்துவிட்டான். உடனே தடியும் தாம்பும் அதினின்றும் எழுந்து, முன் அரசன் பட்டபாட்டை அவனும் அனுபவிக்கும்படி செய்தன. அத்தருணத்தில் பிராமணன்: இனியாவது என் பழங்களைத் தாலாமா! இனியாவது என் பழங்களைத் தாலாமா! என்று வேண்டினான். அதுகண்டு அந்தக் கோமுட்டியும் பயந்து அடிநின்றால் போதுமென்று, வீடுகொள்ளாமல் அடைத்து வைத்த பழங்களை அவன் காலண்டை கொண்டுவந்து காணிக்கையாகக் கொட்டினான். அவைகளையெல்லாம் வீடுகொண்டு சேர்த்து விட்டு மறுபடியும் பிராமணன் தன்னை அடித்து மணிகளைப் பிடுங்கிக்கொண்ட தட்டான்கடைக்குப் போய், அவனும் உடல் முறியப் புடைபடச்செய்து அம்மணிகளையும் வாங்கிக்கொண்டு வீடுவந்துசேர்ந்து நெடுநாள் சுகமாக வாழ்ந்திருந்தான்.

இப்படியிருக்கையில் ஒருநாள் அந்தப் பிராமணனுடைய மூத்த மகளான நரியின் மனையாள் தன் சகோதரிகளைத் தன் வீட்டிற்கு வாவழைத்தாள். அவ்விடத்திலிருக்கையில் அதிக வல்லவளான கடைசிப்பெண், ஒருநாள் காலையில் நரிராஜன் நரிப்போர்வையை வாங்கி அதைத் துவைத்து ஓரிடத்தில் உலர்த்திவிட்டு ஸ்நானஞ்செய்துகொண்டிருக்கப்பார்த்து, அவன் அதிக சுந்தரனான ராஜகுமாரனாயிருக்கவே ஆச்சரியமடைந்து, அங்கிருந்த நரித்தோலை எடுத்து எரித்துவிட்டு, உடனே ஓடித் தன் அக்காளை எழுப்பி: தாயே! இந்த அதிசயத்தைக் கேட்டையா! இத்தனைநாளாய் உன் புருஷன் ஒரு நரிராஜன் என்றல்லவோ நினைத்திருந்தோம்; இப்போது அவனை வந்து பார் என்று சொன்னாள். அதைக்கேட்டு அவள் எழுந்து ஓடித் தன் புருஷனழகைப்பார்த்துப் பிரமித்து நின்றாள். நரிப்போர்வை போய்விட்டதனால் அந்த ராஜகுமாரன் திரும்பவும் நரிவேஷந்தரிக்கக்கூடாமல் தன் புன்சேஷ்டைகள் யாவையும் விட்டுவிட்டுத் தன் குடும்பத்தோடு மாமன்குடும்பத்தையும் வெகு மேன்மையாய்ப் பாதுகாத்துவந்தான்.

வெறுப்பு.

இவ்வுலகத்திலுள்ள எல்லாவுயிர்க்கும் இயற்கையாய்ப் பற்பல குணங்கள் உண்டாயிருப்பதுபோலவே விருப்பு வெறுப்பு என்னும் குணங்களும் உடன்பிறந்திருக்கின்றன. ஆயினும் இக்குணங்களைச் சரியாய் உபயோகித்துக் காரியசித்திபெற்றவர்களைக் காண்பதரிது. உலகத்தில் அநேகர் உண்மையாய் விரும்பத்தக்கவை இவையென்பது தெரியாமல் ஒன்றுகிடக்க ஒன்றைவிரும்பிக் கடைசியில் ஏமாந்து மனநொந்துபோவதுபோலவே வெறுக்கத்தக்கவை இவையென்பதும் தெரியாமல் அநேகர் ஏதோ ஒரு எண்ணங்கொண்டு நற்பொருளையும் வெறுக்கிறார்கள். நமது வாழ்நாளில் நாம் முக்கியமாய்க் கற்கவேண்டிய விஷயமொன்றுண்டு: நாம் வருத்தப்படாமல் எதையும் எளிதில் கைக்கொள்ளக்கூடாது. ஆதலால் நாம் ஒரு பயனுமின்றி ஒன்றை வீணாகவெறுப்பது மிகவும் பிசகானது. ஆயினும் சொல்வது எளிது செய்வது கடினம் என்று பெரியோர் வழங்குகிறபடியே, விரும்பத்தக்கவை இவையென்பதும் வெறுக்கத்தக்கவை இவையென்பதும் நாம் வாயினாற்சொல்வது மிகவும் எளிதே. அதைச் சரியாய் அறிந்துகொண்டு அவ்வவற்றிற்கு இயைந்தபடி நடப்பது மிகவும் கடினமானகாரியம். முதலில் நாம் ஒன்றைநினைக்கத் தொடங்கும்போதே, நமக்கு ஒரு பொருளின் மேல் விருப்பம் எப்படி உண்டாகின்றதோ அப்படியே மற்றொரு பொருள்மேல் வெறுப்பும் உண்டாகின்றது. இதை யோசித்தால் இந்தப் பிரபஞ்சத்தில் எல்லாப் பிராணிகளும் முதலிலேயே நமது விருப்புக்கும் வெறுப்புக்கும் மத்தியில் தாறுமாறாகப் பகுக்கப்பட்டிருப்பதுபோலே காண்கிறது. 'அதிக ஆசை அதிக நஷ்டம்' என்பதுபோலவே விருப்பு வெறுப்பு என்னும் இவ்விரண்டினுள் ஒருபக்கத்திலேயே அதிகமாகத் தமது மநோபாவங்களைச் செலுத்துகிறவர்கள் வெகு சீக்கிரத்தில் மற்றொரு மூலையைப்போய்ச் சேருவார்கள். நமது வாழ்நாள் முழுதும் இரக்ககுணத்தைக் கற்கத்தக்க ஒரு பெரும் பாடசாலையாயிருக்கின்றது. இளமைப்பருவம் போய் முதுமைப்பருவம் வரவரப் பொருள்களை வெறுக்குங்குணமும் சிற்சிலவாய்க் கரைந்து தேய்ந்துபோவதை யாவரும் காணலாம். வயதுமுதிர்ந்தவர்களுக்கு ஒன்றை வெறுக்கவேண்டுமென்னும் எண்ணம் அதிகமாயுண்டாவதில்லை. ஒன்றைப் பகைப்பது பயனற்றது என்று அவர்களுக்கு அநேகமாய்த் தெரியும். மேலும் அவர்களின் மனோகுணங்கள் அதிக ஆடம்பரமில்லாமல் அடக்கமுடையனவாய் அந்தந்தப் பொருளின் குணகுணங்களை உள்ளபடி அறியத் திறமையுடையவைகளாகின்றன. அவ்வவற்றின்

இயற்கையை உள்ளபடி அறியத் திறமையில்லாமல் தாறுமாறாய்த் தெரிந்துகொள்வார்களானால் அவர்களின் செய்கையெல்லாம், கோழியைக் கொடிய ஜந்துவென்று பகைத்துப் பூனையைப் பெருந் தோழனாகப் பாராட்டுகிற சுண்டெலியின் சரித்திரம்போலாகுமேயன்றி வேறல்ல.

வாலிபர்கள் ஒரு பொருளை விரும்புவதில் எவ்வளவு ஆவல் கொண்டிருப்பார்களோ அப்படியே மற்றொரு பொருளை வெறுப்பதிலும் உற்சாகமுடையவர்களாயிருப்பார்கள். ஒருவனுக்கு ஒரு தீங்குசெய்வதற்காகச் செய்யாமல் வீணாக உண்டாகிற வெறுப்புகளெல்லாம் இயற்கையாயுண்டாகின்றவை. அவனெனக்குத் தீங்கு செய்ததனால் நான் அவனைப் பகைக்கிறேனென்று சொல்வதைவிட, அவனைக் காணும்போதே எனக்கு வெறுப்பு உண்டாகிறதென்று சொல்வது எத்தனையோமடங்கு மேன்மையுள்ளது. சிறுவர்கள் ஒரு வஸ்துவை விரோதிப்பது அதின் இயற்கையைப் பார்த்தேயொழிய, அது தமக்கு ஒரு தீங்குசெய்யுமென்பதை நினைத்தன்று. (அதின் இயற்கையைப் பார்த்து என்று சொல்வதைவிட வெளித்தோற்றத்தைக் கண்டென்று சொல்வது மிகவும் திருத்தமானது.) மேல்பார்வைக்குத் தோற்றுகிற பொய்க்கோலமெல்லாம் அவ்வவ்வாறே சிறுவர்களின் மனதில் பதிந்துபோகின்றன. ஒருவன் மிகவும் அற்பமான நடத்தையுடையவனாயினும் கம்பீரவடிவமுள்ளவனானால் அவனை ஒரு மகா புருஷனாக நினைப்பார்கள். சாந்தகுணமுள்ளவனாயினும் பார்வைக்குப் பயங்கரமாயிருப்பானானால் அவனைக் கொடியவனாக நினைப்பார்கள். மிகக்கொடியவனாயினும் மேலுக்கு மனோஹரமாய்த் தோற்றுவனானால் அவனை மிகவும் நன்மைசெய்பவனாக நினைப்பார்கள். ஆயினும் அவர்கள் இவ்வாறு எண்ணுவதைக் குற்றமாகக் கொள்ளக்கூடாது. வெளித்தோற்றத்தைக்கண்டு மயங்கி ஏமாந்துபோகாதவர்கள் யார்? பெண்களின் மேனிமினுக்கையும் சொல்லினிப்பையுங்கண்டு மனிதர்கள் மரணகாலத்திலும் மதிமயங்கிப்போகிறார்களல்லவா? உள்ளும் புறமும் ஒவ்வாது வேறுபட்டிருப்பதை உள்ளபடி கண்டறியமாட்டாமல் சிறந்த பண்டிதர்களும் சோர்ந்துபோயிருக்கிறார்களே! சிறுவர்கள் ஒன்றை விரும்பினாலும் வெறுத்தாலும் மற்றேதுசெய்தாலும் உள்ளூறச்செய்வார்களேயன்றி வயிற்றிலொன்றும் வாயிலொன்றுமாய்ச் செய்யார்கள். இயற்கையை உள்ளபடி காணவேண்டுமானால் சிறுவர்களிடத்தில்தான் காணலாம். கள்ளங்கபடம் ஒன்றுமறியாமல் பிறந்தவடிவமாயிருப்பதே வாலிபமென்று சொல்லப்படுவது. ஆயினும் அந்த வாலிபத்தனம் நெடுநாள் நீடித்திராது. நாளாகநாளாக அவ்வவற்றின் குணாகுணங்களை அறிந்து நேசிக்கத்தக்கவை இவையென்பதும் பகைக்கத்தக்கவை இவையென்பதும் புகழத்தக்கவை இவையென்பதும் இகழத்தக்கவை இவையென்ப

தும் விரும்பத்தக்கவை இவையென்பதும் வெறுக்கத்தக்கவை இவையென்பதும் தேர்ந்தறியத் திறமையுண்டாகும். வெளித்தோன்றுமல் உள்ளே அடங்கியிருக்கும் அறிவின்பெருமையும் ஆலோசனைத் திறமையும் இளமைப்பருவமாயிருப்பவர்க்கு எவ்வாறு தெரியும். தெரியாமலிருப்பதுமன்றி ஒன்று மற்றொன்றுகப் போதமாகின்றது. பெரியவர்களாகி அறியும் திறமையும் உலகவழக்கமும் அதிகமாக ஆக, அததின் சுபாவத்தைக் கூடியவரையில் சரியாகத் தெரிந்துகொள்ளச் சக்தியுண்டாகி, இளமையில் நினைத்திருந்தவையெல்லாம் பிசகானவையென்று தெரிந்து அவ்வவற்றின் பெருமை சிறுமைமுதலிய எல்லாக்குணங்களையும் உள்ளபடி உணர்ந்துகொண்டு முன் இருந்த எண்ணங்களை ஒழித்துவிடுவார்கள்.

ஜனங்கள் வெறுப்பின் சுபாவத்தைப் பொதுவாய்ப் பரிசோதித்துப்பார்ப்பார்களோ அல்லது தமக்குள்ள வெறுப்பைமாத்திரம் தனித்துப் பரீக்ஷித்துப்பார்ப்பார்களோ தெரியாது. வெறுப்பென்பது, எத்தன்மையானதாகத்தானிருக்கட்டும், நாம் கையாண்டு பழகத்தக்க பொருளல்ல; இவ்விஷயத்தில் நெருப்பை இதற்குத் திஷ்டாந்தமாகச் சொல்லலாம்: தீயை நாம் அளவுக்கு அதிகமாக மூளச்செய்தாலும் அநியாயமாய் அதில் ஏதாவது ஒன்றைப் போட்டெரித்தாலும், நாம் செய்தது பிசகென்று நமக்கே தெரிந்து கேட்போர்க்குச் சமாதானஞ்சொல்ல மன்னிப்புதேடுவோமல்லவா? வெறுப்பின் அளவுதெரியாமல் ஒன்றை வெறுப்பதும் இதற்குத் துணைதான். விருப்பும் வெறுப்பும் ஒன்றேடொன்று சம்பந்தப்படாமல் ஒரு பெருங்கோட்டின் இரண்டு முனைகளிலும் நிற்கின்றன. நேசம் அலக்ஷியம்முதலிய குணங்கள் அந்தக் கோட்டில் எங்கும் சேர்ந்திரா. நேசம் அலக்ஷியம் பகையென்பவை இளமைப்பருவத்தில் இயற்கையாயுண்டாயிருப்பனவல்ல. பிற்காலத்தில் பல குணங்களின் செயற்கையாலுண்டாகின்றவை. சிறுவர்கள் ஒரு பொருளை விரும்புவதும், ஒன்றை வெறுப்பதும், ஒன்றை வேண்டுவதும் ஒன்றை வேண்டாமலிருப்பதுமுண்டு. ஆயினும் ஒன்றை உதாசீனமாய் அலக்ஷியஞ்செய்வது அருமை. நேசத்தின் சுபாவம் இப்படிப்பட்டதென்றே அவர்களுக்குத் தெரியாது. ஏனெனில் ஒருவனை உண்மையாய் நேசிப்பதென்றால், நாம் முன் ஒரு சஞ்சிகையிற் சொல்லியபடி, அதற்குப் பல விதிகளும் நியாயங்களும் மனவுறுதியும் விடாமுயற்சியும் ஆளுந்திறமையும் தீர்க்காலோசனையும் இன்றியமையாத சாதனங்களாயிருக்கின்றன.

அலக்ஷியகுணம் நேசமாகவும் நேசம் அலக்ஷியகுணமாகவும் எளிதாக மாறலாம். ஆயினும் இவ்விரண்டு குணங்களும் விருப்பமாகவாவது வெறுப்பாகவாவது மாறுவது கொஞ்சங்கடினமானது. விருப்பம் வெறுப்பாவதும் வெறுப்பு விருப்பாவதும் மிகவும் எளிது. விருப்பாகட்டும் வெறுப்பாகட்டும் உண்மையாக உறுதியாய்ப் பற்றிப்போமானால் அது மறுபடி மற்றொன்றாக மாறவொட்டாமல் நமது மனவுறுதி நன்றாகக் காத்திருக்கும். உதாசீனகுணம் சிறிதளவு அடியிற்படிந்திருக்குமானால் நேசத்தை நன்றாக ஸ்தாபிப்பதற்கு அதுதான் ஆழ்ந்த அஸ்திவாரமாயிருக்கும். ஆயினும் அப்படி உண்டாகும் சிநேகம் மறுபடியும் உதாசீனமாக மாறிக் கெட்டுப்போவதுமுண்டு. ஆசைக்கும் வெறுப்புக்கும் மத்தியில் மற்றெந்தக்குணமும் சேர்ந்து நீடித்திராது. சாதாரணமான வெறுப்பு ஒருவேளை ஆசையாக மாறினாலும் மாறலாம். அந்த வெறுப்பில் ஒரு ருசியுண்டாய்விடுமானால் அது மறுபடியும் மனம்பொருந்த ஆசையாகமாறுவது அசாத்தியம். முதலில் உதாசீனர்களாயிருந்தாலும் ஆண்பெண்களுக்குப் பின்பு திடமாய் மனம்பற்றி ஆசையுண்டாகிறதென்று யாவர்க்கும் தெரியுமே. ஆயினும் அப்படிப்பட்ட ஆசை மிகவும் பலவீனமானது. அந்தக் குணம் எல்லாக் குணங்களிலும் மிகவும் ஈனமானது. அந்த விருப்பம் உறுதியற்றதாகையால் அது வெறுப்பாக மாறுவது மிகவுமெளிது. வரவர விரோதத்திற்போய் முடிந்தாலும் முடியும். இப்படிப் பலவிதமாயுள்ள விருப்பங்களிலும் முதற்பார்வையிலேயே நமக்கு உண்டாகும் விருப்பந்தான் மிகவும் சுகத்தைத் தருவது. அப்படியே முதல்தோற்றத்திலேயே உண்டாகும் வெறுப்புதான் ஆயுளளவும் விடாமல் நீடித்திருக்கும். நமக்கு நன்றாய் ஆலோசிக்குந்திறமையுண்டானபின்பு சில மாறுவதுமுண்டு. இப்படிப்பட்டவையென்று உணர்ந்துகொண்டு, அவைகளால் தீமைகள் உண்டாகாதபடி, நம்மால் விலக்கக்கூடிய பல குறைவுகளைக்கூட ஒழிக்காமல் நாமே வேண்டுமென்று வரவழைத்துக்கொள்வதனாலேதான் இப்படி அநேகவிதமாய்க் குணபேதங்கள் உண்டாகின்றன. நாம் உலகவியற்கையோடு ஒத்துப்பழகினால் இத்தன்மையான குறைவுகள் அநேகமாயொழிந்துபோம். நமக்கு ஒன்றின்சொரூபம் உண்மையாய்த் தெரியாமையால் அதைப்பார்த்து உண்டாகும் மயக்கமும் பிரமமும் பின்பு ஒருகாலும் உண்டாகாது.

(இன்னும் வரும்.)

சிறுவர்க்கான கதை.

சிங்கமும் சுந்தரமும்—(தொடர்ச்சி.).

ஒரு வர்த்தகன் ஒருநாள் ஓரிடத்திற்குப்போய் வருகையில் பொழுதுபோய் இருள்மூடி வழிதப்பி நடுக்காட்டிலே தெரிந்த ஒரு அற்புதமான மாளிகையிற் போய்த் தங்கினன். அந்த மாளிகையில் ஒருபிராணியும் இல்லாமலிருந்தாலும் அதற்கு உடையதாயிருந்த சிங்கம் அவனுக்குத் தெரியாமலே வேண்டியபடி உபசாரஞ்செய்தது. ஆயினும் அவன் புறப்படும்போது அந்தச் சிங்கத்துக்குச் சம்மதமில்லாதகாரியம் ஒன்று செய்ததனல் அதின் கையில் அகப்பட்டுக்கொண்டு, அது கேட்டபடியே, தன் மகளோ தானே, யாராவது ஒருவர் திரும்பிவருவதாய் ஒப்புக்கொண்டுவந்து மூன்றுமாதங்கழித்துச் சுந்தரம் என்னும் தன் மகளை அவ்விடத்திற்கு இட்டுக்கொண்டுபோனன்.

தகப்பனும் பெண்ணுமாய்ச் சிங்கமாளிகைபோய்ச் சேர்ந்தவுடன், அவ்விடத்தில் அவர்களுக்கு ஒன்றுமொன்று குறைவில்லாமல் எவ்வகைப் பொருள்களும் உணவுக்குவேண்டிய பல பண்டங்களும் சித்தமாயிருந்தன. சுந்தரம் தனக்கு நேரிடப்போவதாகிய ஆபத்தைப்பற்றிச் சிறிதும் துக்கந்தோன்றவொட்டாமல் அங்கிருந்த பண்டங்களை வேண்டுமளவு தகப்பனுக்குப் பரிமாறித் தானும் வயிருறப் புஜித்துப் பராக்காயிருந்தாள். ஆயினும், தங்களுக்குவேண்டிய எல்லாப் பொருள்களும் சமிர்த்தியாய் நிரப்பிவைத்திருந்ததைப் பார்க்கவே, தனக்கு நல்ல உணவுகளையிட்டு வலிமையுண்டாக்கிப் பிறகு தன்னைப் புஜிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டுதான் அந்தச் சிங்கம் இவ்வாறு தங்களுக்கு உபசாரஞ்செய்திருக்கிறதென்றுமாத்திரம் அவளுக்குத் தோன்றிற்று. அவர்கள் புஜித்தானவுடனே கர்ச்சனையொன்றுகேட்டது. அதைக் கேட்கவே வர்த்தகன் சிங்கம் வருகிறதென்று தெரிந்து திகிற்பட்டுத் தன் மகளுக்கு க்ஷேமமுண்டாகவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்தான். சிங்கத்தைப்பார்த்தவுடன் சுந்தரத்திற்கு விசேஷமாய்ப் பயமுண்டாயிற்றாயினும் அவள் தன்னால் கூடியவளவு அதை அடக்கமுயன்றாள். சிங்கம் சுந்தரத்தண்டைவந்து அவளை ஏறிறங்கப்பார்த்து: பெண்ணே! நீ உள்ளுற இஷ்டப்பட்டு என்னிடத்திற்கு வந்தாயா, அல்லது அயலாருடைய நிர்ப்பந்தம் பொறுக்கமாட்டாமல் வந்தாயா என்று கம்பீரத்தொனியாய்க் கேட்க, அவள்: நானேதான் இஷ்டப்பட்டு வந்தேனென்று சிறிதும் பயப்படாமல் தைரியமாய்ச் சொல்லவே, சிங்கம் சந்தோஷப்பட்டு: நீ மிகவும் சமர்த்தி; உன்னைப் போல நற்குணமுள்ளபெண்ணை நான் எங்கும் காணவில்லை; இனி நான் உனக்கு அடிமையாகிறேன் என்று சொல்லிற்று.

சிங்கம் இவ்வாறு அடங்கிச்சொன்ன உத்தரத்தைக் கேட்கவே, சுந்தரத்துக்குக் கொஞ்சம் தைரியமுண்டாயிற்று. ஆயினும் உட

னே அது வர்த்தகனைப்பார்த்து: நீ நாளைக்காலையில் இவ்விடத்தை விட்டு உன் ஊர்போய்ச் சேரவேண்டுமென்று சொல்லக்கேட்டுப் பயமடைந்தாள். காலையில் தன் மாளிகையை விட்டுப்போம் படி வணிகனுக்குக் கட்டளையிட்டுச் செலவுபெற்றுக்கொண்டு சிங்கம் வந்தவழியே போய்விட்டது.

சிங்கம் அப்புறம் போனவுடன் வர்த்தகன் மகளைக் கட்டிக்கொண்டு: குழந்தாய்! உன்னைத் தனியே சிங்கத்தினிடத்தில் விட்டுவிட்டு நான் போகவேண்டுமென்று சொல்லக்கேட்கையிலேயே எனக்கு மூர்ச்சையுண்டாகின்றது. நீ வீட்டிற்குப்போ; நானிங்கே நிற்கிறேன் என்றான். அவன் எவ்வளவு வேண்டியும் அவள் சம்மதப்படாமையால் மிகவும் விசனமாய் அன்றிராத்திரி அவளுடன் அவ்விடத்தில் படுத்திருந்தான்.

அவர்கள் படுக்கப்போம்போது விசனத்தால் சிறிதும் தூக்கம் வாராமல் அவர்களுக்கு இமையோடு இமைகூட்டுவதுகூட வெகு வருத்தமாயிருந்தது. ஆயினும் போய்ப் படுத்தவுடனே அயர்ந்து ஓரே தூக்கமாய்த் தூங்கிப்போனார்கள். பின்மாலைவேளையில் சுந்தாம், யாரோ ஒரு பெண்பிள்ளை குலுங்கப் பணிபூண்டு குச்சிரியப் பட்டுடுத்து தன்னெதிரில்வந்து தோன்றி: குழந்தாய்! நீ தகப்பனுயிரைக் காப்பதற்காக உன் உயிரைக் கொடுக்கத் துணிந்தையே! இந்த நற்குணத்தைப்பார்த்து எனக்கு உன்னிடத்தில் வெகு சந்தோஷமாயிற்று; இனி உனக்கு ஒரு குறையுமில்லை; சுகமாகவாழ்வாய் என்று அனுக்கிரகஞ் செய்ததாய்க் கனவு கண்டு உடனே விழித்துக்கொண்டு அதைத் தந்தையுடன் சொன்னாள். அந்தச் சொப்பனத்தைக்கேட்டு அவனுக்குக் கொஞ்சம் தைரியமுண்டானாலும் மகளைத் தனியேவிட்டுப்போக மனமில்லாமல் நெடுநேரம் அவளுடன் மன்றாடினான். கடைசியில் அவளை வேண்டுவதிற் பயனில்லையென்று தெரிந்து அவளை க்ஷேமமாயிருக்கும்படி வாழ்த்தித் தன்னிடத்திற்குப்போயினான்.

தகப்பன் தன்னைத் தனியே விட்டுவிட்டுப் போனவுடனே அந்தப் பெண்ணுக்கு எங்குமில்லாத துக்கமுண்டாயிற்று. ஆயினும் அவள், தைரியத்தைக் கைவிடுவது பின்னும் அதிகமாகக் கெடுதியுண்டாக்குமென்று ஆலோசித்து, மேலெழுந்த துக்கத்தை உள்ளடக்கிப் பராக்காய்ப் பொழுதுபோக்கும்படி அந்த மாளிகையிலுள்ள விசித்திரங்களை விநோதமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்படிப் பார்த்துக்கொண்டிருக்கையில் ஓரிடத்தில் ஒரு அறையின் முன்புறத்தில் 'சுந்தாத்தின் அறை' என்று எழுதியிருந்தது. அது கண்டு அவள் இதென்னவென்று பிரமித்து அந்த அறைக் கதவைத் திறந்தாள். அதனுள், அவள் தகப்பனைவிட்டுத் தனியே நிற்பதனால் உண்டான துக்கந்தணிந்து சந்தோஷமாயிருக்கும்படி, பலவித விநோதவஸ்துக்களும் விநோதமாய்ப் படிப்பதற்குவேண்டிய பல

புத்தகங்களும் நிறைந்திருந்தன. அவற்றுள் ஒரு புத்தகத்தைப் பிரித்துப்பார்க்கையில்,

"சுந்தரமே சோர்வதேன் சிந்தவேண்டாம் கண்ணீரை
நொந்துயிர்ப்பக் காரணமென் னிங்குனக்குச்—சொந்தமன்றோ
என்னுடைமை யுனதிஷ்ட மெப்படியோ வப்படியே
என்னையுமாள் யானுன் னடி"

என்று எழுதியிருந்தது.

அதைப்பார்த்து அந்தப்பெண், சிங்கத்துக்கு நம்மைக் காப்பாற்றவேண்டுமென்று கருத்தேயொழியக் கொல்லவேண்டுமென்று எண்ணமில்லையென்று சந்தோஷமடைந்தாள். ஆயினும், இப்போது என் தந்தை என்னசெய்கிறாரோ பார்க்கவேண்டுமென்று மனம் பதைக்கிறதேயென்று புலம்பத்தொடங்கினாள். அத்தருணத்தில் அவளெதிரிலிருந்த ஒரு நிலைக்கண்ணாடியில், அவள் தகப்பன் விசனமாய் வீடேறுவது, அதைக்கண்டு சகோதரிகள் சந்தோஷமாய் ஓடிவருவதுமுதலான யாவையும் உள்ளபடி தெரிந்தன. அதைக்கண்டு சுந்தரம், சிங்கம் அதிக சாமர்த்தியம் உடையதாயிருப்பதுமன்றி, நம்மிடத்தில் மிகவும் அன்பும் ஆதரவுமாயிருக்கிறதென்று பேரானந்தமடைந்தாள். பகற்போஜனத்திற்கு வேண்டியவையெல்லாம் சித்தமாய் ஆக்கிவைத்திருந்ததுமன்றி, அவள் புஜிக்குங்காலத்தில், மனிதனொருவனும் கண்ணுக்குத் தெரியாமலிருக்க, கீதவாத்தியங்கள் விநோதமாய் வாசிக்கப்பட்டன.

அன்று ராத்திரி அவள் புசித்துக்கொண்டிருக்கையில் சிங்கம் கர்ச்சித்துக்கொண்டுவந்தது. அவள் தன் மனதை எவ்வளவு தைரியப்படுத்தியும் அதனால் அவளுக்குப் பயமுண்டாகாமலிருக்கவில்லை. சிங்கம் மறைவிலேவந்து நின்று: பெண்ணே! நான் நீ சாப்பிடுவதை வந்துபார்க்கலாமாவென்று கேட்க, அவள்: பயந்து உன் இஷ்டப்படிசெய் என்றாள். அதற்குச் சிங்கம்: அப்படி ஒருபோதுமில்லை. இம்மாளிகையில் நீ இட்டது சட்டந்தான். என்னைப் பார்க்க உனக்கு விருப்பமில்லையென்றால், இப்போதே நான் ஓடிப்போகிறேன். அது இருக்கட்டும்; நான் மிகவும் விகாரஜந்துவாய் உன் கண்ணுக்குத் தோன்றவில்லையா என்று கேட்டது.

அதைக்கேட்டு சுந்தரம்: ஆம், நான் ஒருபோதும் பொய்சொல்வதில்லை; ஆனால் நீ மிகவும் நல்ல சுபாவமுள்ளவன் என்று சொல்ல, அதைக்கேட்டுச் சிங்கம்: நீ சொல்வது உண்மைதான்; நான் பார்வைக்கு விகாரமாயிருப்பதுமன்றி மிகவும் புத்தியில்லாதவன். மிருகப்பிறப்பல்லவா! என்று சொல்ல, அவள்: மிகவும் மடையனாயிருந்தால் அவனுக்குத் தன் சுபாவம் தனக்குத் தெரியுமோ என்றாள்.

இப்படி இவள் தனக்குப் பக்ஷமாய்ப்பேசவே சிங்கம் மிகவும் சந்தோஷமடைந்து, பெண்ணே! இங்கே ஒன்றுலொன்று குறைவில்லாமல் உனக்கு வேண்டியவையெல்லாம் நிறைந்திருக்கிறது.

ஏதாவது ஒன்று இல்லையென்று நீ ஒருபோதும் குறைப்படுவது கூடாது. இங்கே உள்ளதெல்லாம் உன் சொத்துக்கள்தாம் என்று சொல்ல, அவள்: உன்னைப்போல் இவ்வளவு நற்குணமுள்ள பிராணியை நான் எங்கும் கண்டதில்லையென்று சொல்லிச் சந்தோஷப் படுத்தினாள். அதற்குச் சிங்கம்: எப்படியிருந்தாலும் நான் மிருகந்தானே என்று சொல்லித் துக்கிக்க, அவள்: மனிதனாய்ப் பிறந்தவர்கள் எத்தனையோபேர் மிருகத்தன்மையுடையவர்களாயிருக்கக் கண்டிருக்கிறோம். அதைவிட மிருகமாய்ப் பிறந்தாலும் மனிதத் தன்மையோடு இருப்பதே மேலானதென்று சொன்னாள்.

இப்படி இருவரும் நெடுநேரம் உல்லாசமாய்ப் பேசியபிறகு சிங்கம் புறப்பட்டுப்போக எழுந்திருக்கையில், அவள் திடுக்கிடும்படி ஒரு வார்த்தை சொல்லிற்று. இந்நேரம் இனிப்பாய்ப் பேசியிருந்து கடைசியில் 'என்னை நீ கலியாணஞ்செய்துகொள்வாயா' என்று சிங்கம் கேட்கவே, அவள் மிகவும் பயந்தாள். உண்மை பேசுவதே அவள் சுபாவமாகையாலும், பொய்பேசினால் சிங்கத்திற்குச் சிறிதும் சம்மதமாயிராதென்று தகப்பன் சொல்லியிருந்ததனாலும் அவள் பொய்பேசத்துணியாமல், நான் மாட்டேனென்று கண்டிதமாய் மறுத்துவிட்டாள். அதற்குச் சிங்கம் பதில் ஒன்றும் சொல்லமாட்டாமல் பெருமூச்சு விட்டுக்கொண்டு போய்விட்டது. பிறகு சுந்தரம் தனியே இருக்கையில், ஐயோ! இது இவ்வளவு நற்குணமுடையதாயிருந்தும் மிருகமாயிருக்கிறதேயென்று அதற்காக மிகவும் பரிதாபப்பட்டாள். சிங்கம் நாள்தப்பாமல் ராத்திரி தோறும் அவளிடத்திற்கு வந்து அவளைச் சந்தோஷப்படுத்திப் போம்போது 'என்னைக் கலியாணஞ்செய்துகொள்வாயா' என்று ஒரு பேச்சு கேட்டுவிட்டுப்போய்க்கொண்டிருந்தது. ஆயினும் யாதொரு குறையுமில்லாமல் சந்தோஷமாகவே சுந்தரம் மூன்று மாதகாலம் அந்த மாளிகையில் வாசஞ்செய்துகொண்டிருந்தாள்.

(இன்னும் வரும்.)

சமாசாரம்.

ருஷிய துருக்கர் சண்டை.— நாளது மீ மத்தியில் ப்ளெவ்னு என்னும் இடத்தில் ஒரு சண்டை நடந்தது. அதனால் ருஷியர் பிடித்த சில கோட்டைகள் மறுபடியும் துருக்கரதீனமாயின. அவைகளை மறுபடியும் பிடிக்க ருஷியரால் மாளாதென்கிறார்கள். இன்னும் இரண்டொருமாதத்துக்குள்ளாக ருஷியர் டானியூப் நதியைத் தாண்டிப்போனால் பிழைக்கலாம்; இல்லாவிட்டால் ஆற்றில்வீழ்ந்து அதோகதியாய்ப் போகவேண்டுவதுதானும். ருஷிய சக்கரவர்த்தி கிறிஸ்துமதநிர்வாஹகன் என்று பேர்மாத்திரம் வஹித்துக்கொண்டு மிருகம்போல முரட்டுநடத்தை நடக்கிறானென்று மற்ற ராஜாக்களெல்லாம் சுல்தான்பக்கமாயே பேசுவதாய்த் தெரியவருகிறது.

க்ஷாமநிவிர்த்தி.—இத்தேசத்தில் துரைத்தனத்தார் அங்கங்கே அன்ன சத்திரங்கள் ஏற்படுத்திப் பேதைஜனங்களைப் போஷித்துவருகிறார்கள் என்று சொன்னோமே. அப்படிச் சோறிடுவதனால் ஜனங்களுக்குக் கொஞ்சம் சவுக்கியக்குறைவு உண்டாவதுமன்றி பிரயாசை அதிகமாகிறதென்றும், ஜாதிமதபேதங்களால் ஒதுங்கிநிற்பவர்களுக்குப் போஷணைகிடைப்ப தில்லையென்றும் தெரிந்து, இப்போது யாவர்க்கும் எங்கும் வாரப்பணங் கொடுத்துவருகிறார்கள்.

அது இச்சென்னையில் நடந்துவருகிறவிதமாவது: இப்பட்டணத்தை எட்டு பேட்டைகளாகப் பிரித்து, அதற்குத் தகுந்த அதிகாரிகளை ஏற்படுத்தி, அந்தந் தப் பிரிவைச்சேர்ந்த ஜனங்களுக்கு அங்கங்கே பணங்கொடுத்துவருகிறார் கள். அதன் விவரத்தை அடியில் குறிக்கும் அட்டவணையிற்காண்க.

		Rs.	A.	P.
துரைத்தனத்தாரிடத்தினின்றும்	வந்தது.......	12,000	0	0
மற்ற தனவான்களிடத்தினின்றும்	,, ...	15,104	11	8
க்ஷாமநிவிர்த்தி நிதியாரிடத்தினின்றும்	,, ...	40,000	0	0
		67,104	11	8

கையிருப்பாக முன்பணமாய்க் கொடுத்திருப்பது.	பிரிவு.	இதுவரையிலும் செலவானது.			சானது மாதக் கடைசிவாரத்தில் கண்ட தொகை. பெரியவர்களின் தொகை.	சிறுவர்களின் தொகை.	அந்த வாரத்தில் செலவான ரூபாயின் தொகை.			டிக்கட்டுமுதலானவை அச்சிடுவது முதலானவைகளுக்கான செலவு.			மொத்தம் செலவு.		
650	1-வது	1,598	12	0	779	211	442	4	0	2	8	0	2,043	8	0
1,700	2-வது	9.354	2	9	2,764	1,138	1,666	8	0	,,	,,	,,	11,020	10	9
1,200	3-வது	6,776	10	5	1,072	436	1,181	0	0	19	0	0	7,976	10	5
300	4-வது	995	13	8	274	82	157	8	0	,,	,,	,,	1,153	5	8
900	5-வது	2,726	4	2	906	433	561	4	0	11	11	0	3,299	3	2
250	6-வது	809	12	0	376	140	223	0	0	7	12	0	1,040	8	0
1,200	7-வது	5,048	11	0	1,676	700	1,014	0	0	2	6	6	6,065	1	6
950	8-வது	2,022	3	3	1,297	512	777	0	0	19	0	0	2,818	3	3
,,	நகரோபகார சபையார்.	944	6	8	,,	,,	,,	,,	,,	207	7	4	1,151	14	0
7,150		30,276	11	11	9,146	3,652	6,022	8	0	269	12	10	36,569	0	9

	Rs.	A.	P.
	36,569	0	9
முன்பணமாகக் கொடுத்திருக்கும் 7,150 ரூபாவேர்கூட இருப்புமொத்தம்...	30,535	10	11



THE GREAT ENTRANCE GAT[illegible] THE PAGODA OF TANJORE.

தஞ்சை[illegible]கரம்.